போர்வாள்

"போர்

சந்தா விபர

★

ஓராண்டு	ரூ.	5 0
6 மாதம்	ரூ.	2 8 0
தனிப்பிரதி		0 1 6

ஆசிரியர்கள் : காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B A (Hons)

திராவிடர்
வார வெளியீடு

தனி இதழ் அணா 1½
வெளி நாடு அணா 2

வாள் 2

சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 ஆடி 1
16—7—49 சனிக்கிழமை

வீச்சு 46

முடிந்துவிட்டது, தோழர்களே!

திருமணம்

முடிந்துவிட்டது!

முடிந்து விட்டது, தோழர்களே திருமணம் முடிந்து விட்டது.

பெரியார் ஈ. வே. ரா.—மணியம்மை திருமணம் முடிந்து விட்டது!

சென்ற ஒரு மாத காலமாக, தமிழகத்தையே ஒரு குலுக்குக் குலுக்கிவிட்ட "பெருமை" படைத்த திருமணம் நடந்து முடிந்து விட்டது!

நாடெங்கும் பேசப் பட்டு வந்த திருமணம்—மக்கள் நாவில் எல்லாம் நடமாடிய திருமணம்—ஏடுகளில் தாண்டவமாடிய திருமணம்—எக்கட்சியினர் கவனத்தையும் தன்பால் ஈர்த்துக் கொண்ட திருமணம் அந்தத்திருமணம் நடந்துவிட்டது.

திராவிடர் கழகம் என்னும் போர் வாளைக் கரத்திலே ஏந்தி நிற்கும் மாவீரர் ஒவ்வொருவர் கண்ணிலிருந்தும், கண்ணீர், ஆறெனப் பெருக்கெடுத்தோடும் வேதனைமிகு நிலைமையை உண்டுபண்ணிய திருமணம் முடிந்துவிட்டது.

வேண்டாம் வேண்டாம் என்று நாம் தடுத்தோம். வேண்டாம் வேண்டாம் என்று நாடு தடுத்தது. வேண்டாம் வேண்டாம் என்று கழகப் பிரமுகர்கள் தடுத்தனர். வேண்டாம் வேண்டாம்என்று எங்கெங்கும் உள்ள திராவிடர் கழகங்கள் தடுத்தன. என்றாலும், வேண்டும், வேண்டும், என்று திருமணத்தை நடத்தி முடித்துவிட்டார் பெரியார் ஈ. வே. ரா.

இந்தத் திருமணம் தீது என்றது நாம் சிந்திய கண்ணீர்! இத் திருமணம் அடாதுஎன்றது நம்முடைய உள்ளம்! இத் திருமணம் ஆகாது என்றது நாம் பட்ட வேதனை! இத் திருமணம் தவறானது என்றது நாம் செய்த பிரசாரம்! என்றாலும் திருமணம் முடிந்து விட்டது, தோழர்களே, சென்ற வாரமே முடிந்து விட்டது.

ஆயிரமாயிரம் திராவிடர்கள் நீர் மல்கும் விழியினராய் நிற்க. ஆயிரமாயிரம் தாய்மார்கள் வேதனை வேதனை என்று சோகமுடன் கூற, ஆயிரமாயிரம் தொண்டர்கள் அந்தோ அந்தோ என அரற்ற, ஆயிரமாயிரம் மாணவர்கள் தலைவரே, தந்தையே, தகுமா, எனத் தேம்பி அழ, இவ்வளவுக்கு மிடையே திருமணம் இனிதேநடந்தேறிவிட்டது.

கெஞ்சினோம்—பலனில்லை!

வேண்டிக்கொண்டோம் — பலனில்லை!

வாதாடினோம் — பலனில்லை!

ஆயிரம் நியாயங்களைக் காட்டினோம்—பலனில்லை!

நம் கண்ணீர்க் கடல் மீது மிதந்த வண்ணம் திருமணத்தை நடத்தியே முடித்து விட்டார் இதுவரை தலைவர் என்று நம்மால் ஆசையுடன், பாசத்துடன், மட்டற்ற மகிழ்ச்சியுடன் அழைக்கப்பட்டு வந்த பெரியார் அவர்கள்!

அவர்தம் அருமைத் தொண்டர்களாகிய நாம் புலம்புகிறோம் என்பதற்காக அவர் தயங்கவில்லை, அவர்தம் ஒவ்வொரு எழுத்தையும் ஒவ்வொரு கட்டளையாகக்கொண்டு பணியாற்றிய நாம், அடிபணிந்து வேண்டுகிறோமே – என்பதற்காக அவர் தன் முடிவை மாற்றவில்லை, அவராலேபோற்றி வளர்க்கப்பட்ட கட்சிக்கு இந்தத் திருமண ஏற்பாட்டாலே பெரியதோர்இழிவும் பழியும் அவமானமும் வருகிறதே என்பதை

[illegible]வாகக் கமிட்டியை அவமானப்படுத்தினார் பெரியார்!

[illegible]தும் அவர் தன் திரு[illegible]த்தவில்லை. முடித்து [illegible]பொருந்தாத் திருமணத்[illegible] முடித்து விட்டார்!

[illegible] திருமணம் நிகழப்போகி[illegible]ன்ற திடுக்கிடும் செய்தி கூரி[illegible]போல வந்து நம் நெஞ்சில் [illegible]ய்ந்த நாள் முதலாக, நம் அன்புள்ள தந்தை இறந்து போனால் அல்லது நம் அருமைத்தாய் மாண்டு போனால் அல்லது நம் உயிருக்குயிரான உத்தமத் தோழர் ஒருவர் மறைந்து போனால் எப்படி நாம் பதைபதைத்துத் – துடிதுடித்துப் போவோமோ, அப்படிதான் மனம் பதறியவர்களாய் நடமாடும் பிணங்களென நாட்டில் உலவலானோம். நம்முடைய இந்தப் பரிதாபகரமான நிலையைக் கண்டேனும் தலைவர் மனம் இளகாதா, அவர் முடிவு மாறாதா, இந்த ஆகாவழித் திருமணம் நிற்காதா, நம் நெஞ்சில் திருமணம் நின்றது எனும் இன்பப் புதுச்சேதி வந்து பாயாதா என்றே ஆவலுடன், ஆர்வத்துடன், பெரியாரின் முகத்தையே, அவர் பேசும் சொற்களையே கூர்ந்து கவனித்தபடி இருந்தோம். ஆனால் அவரோ, நம் அனைவரின் உள்ளத்துடிப்பையும் அலட்சியம் செய்து விட்டு, திருமணத்தை 9—7—49- அன்று செய்து முடித்துவிட்டார்.

10—7—49-அன்று காலை, திருச்சியில், திராவிடர் கழக மத்திய நிர்வாகக்கமிட்டி உறுப்பினர்களின் கூட்டம், இந்தத்திருமண சம்பவத்தைப்பற்றிக் கலந்துபேசுவதற்காகவென்றே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் பெரியாரோ, அதற்கு முந்தியநாள், 9—7—49–அன்று, திருமணத்தை, அவசர அவசரமாக, கமிட்டி கூடுவதற்குள்ளாகச் செய்து கொண்டு விட்டார்.

பெரியார், கமிட்டி கூட்டத்திற்கு வந்திருக்கலாம்; வந்திருக்க வேண்டும், வந்து, கமிட்டி உறுப்பினர்களைக் கண்டு, தான் திருமணம் செய்து கொள்ளப் போவதைப் பற்றி அவர்கள் கருத்தென்ன என்பதைக்கேட்டு, அவர்கள் கருத்து தன் கருத்துக்கு மாறாக இருக்குமானால் ஏன் அப்படி மாறுபட்ட கருத்தைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள் அவர்கள் என்பதைக் கண்டறிந்து, பிறகு, ஒன்று, தான் செய்வது நியாயந்தான் என்பதை அவர்களும் ஒப்புக் கொள்ளும் விதமாக விளக்கம் தரமுடியுமானால் தந்து, அவர்கள் அனைவரையும் தன்பக்கம் திருப்பிக் கொண்டிருக்க வேண்டும். அல்லது அவர்கள் கூறுவதுதான் நியாயம் என்பதாகத் தனக்குத் தோன்றுமானால் அவர்கள் கருத்துக்கு மதிப்புக்கொடுத்து, தன் கருத்தை மாற்றிக்கொண்டு, 'திருமணத்தை நிறுத்திவிடுகிறேன்' என்று அறிவித்திருக்கவேண்டும். இதுதான் முறை, இதுதான் ஒழுங்கு. இந்தப் பாதை வழியாகத்தான் பெரியார் நியாயமாகச் சென்றிருக்க வேண்டும். இப்படிச் செய்திருப்பாரானால் பெரியார் அவர்களை யாரும் பாராட்டாமல் இருக்கமாட்டார்கள்.

ஆனால் பெரியார் அவர்களோ இந்த நேர்மைவழியைக் கடைபிடித்தாரில்லை. கடைப்பிடித்து, கமிட்டி கூட்டத்திற்கு வந்தாரில்லை. வந்து, தன் செயல் பற்றிய விளக்கவுரை தந்தாரில்லை. தந்து, கமிட்டி உறுப்பினர்களைத் தன் பக்கம் திருப்பினாரில்லை; மாறாக சென்னையிலேயே தங்கினார்—கமிட்டி உறுப்பினர்களுக்குத் தன் அலட்சியத்தையும் அவமானத்தையுமே பரிசாக வழங்கினார்!

கமிட்டி உறுப்பினர்களின் கூட்டத்திற்குப்பெரியார் வராமல் இருந்ததே, வந்து தன் கருத்தை விளக்காமல் இருந்ததே, அப்படி விளக்க வேண்டியது தன் கடமையும் உரிமையுமாகும் என்பதை அவர் உணராததே, அந்தக்கமிட்டியை அவர் எவ்வளவு அலட்சியமாக, எவ்வளவு அவசியமாகக் கருதுகிறார் என்பதற்குப் போதுமான "ருஜு" ஆகும். ஆனால் அலட்சியத்தின் எல்லைக்கோடு அந்த அளவோடா நின்றது. இல்லை இல்லை, அவர் அந்தக் கமிட்டி உறுப்பினர்களின் கூட்டத்திற்கு வராமல் இருந்ததோடு இல்லை. உறுப்பினர்கள் எதைப் பேசினால் எனக்கென்ன, என் திருமணத்தைப் பற்றிப் அவர்கள் என்ன கருத்தைக் கொண்டிருந்தால்தான் நான் ஏன் கவலைப்படவேண்டும், இவர்கள் யார் என் திருமணத்தைப் பற்றி பேச, இவர்கள் என் திருமணத்தைப் பற்றி ஒரு கருத்தைக் கூறுவதா அதைக் கேட்டு நான் நடப்பதா, இவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டுதான் நான் நடக்கவேண்டுமா, என்றெல்லாம் கேட்பதைப் போல, நாளையதினம், திருச்சியில் கமிட்டி உறுப்பினர்கள் கூடுகிறார்கள் என்றால் இன்றையதினம் சென்னையில், திருமணத்தை முடித்துவிட்டிருக்கிறார் பெரியார்! ஞாயிறு அன்று கமிட்டியினர் கூடுகின்றனர். சனிக்கிழமையன்றே பெரியார் திருமணத்தை நடத்தியிருக்கிறார். திருமணத்தைப்பற்றி கமிட்டியினர் எந்த முடிவுக்கு வந்தால்தான் நமக்கென்ன என்ற தோரணையிலே பெரியார் காரியமாற்றி இருக்கிறார். மாகாண திராவிடர் கழகத்தை நடத்திச்செல்லும் தலைமைக்கமிட்டி அல்லவா அது, அந்தக் கமிட்டி உறுப்பினர்களின் உள்ளம் புண்படும் விதமாக நாம் நடக்கலாமா, அது முறையா, என்ற எண்ணம் ஒரு துளியுமின்றி அவர் தன மணவினையை முடித்திருக்கிறார். கமிட்டியினர் கூட்டத்திற்கு வந்து தன்கருத்தை விளக்கத்தவறியதன் மூலமாக கமிட்டியினரை மிகுந்த அவமானத்துக்கு உள்ளாக்கிய தலைவர், அந்தக் கமிட்டியினரின் முடிவு தெரிவதற்கு முன்னதாகவே தன் திருமணத்தை முடித்துக் கொண்டதன் மூலம் அந்தக் கமிட்டியினரை எல்லையற்ற அவமானத்துக்கு ஆளாக்கியிருக்கிறார். அப்படித்தான், கமிட்டியினர் கூடிப்பேசுவதற்கு முன்னரேயே, கமிட்டித் தோழர்களை அவமானப்படுத்துவது போல திருமணம் செய்து கொண்டாரே பெரியார், செய்துகொண்ட பிறகாவது, நாளையதினம் கமிட்டியினர் கூடுகின்றனரே, கூடுகின்ற போது நம் திருமணம் நடந்தேறிவிட்ட செய்தியே அவர்களுக்குத் தெரியாமல் இருக்குமே, திருமணம் இன்னமும் நடக்கவில்லை என்ற எண்ணத்தில் அல்லவா அவர்கள் தத்தம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வர், திருமணம் முடிந்துபோன பிற்பாடு இன்னமும் திருமணம் நடக்கவில்லை என்ற எண்ணத்தில் அவர்களைக் கிடக்கவிடுவது நியாயமல்லவே என்றெண்ணி, "**திருமணம் முடிந்துவிட்டது—மன்னிக்கவும்**" என்று ஒரு தந்தியாவது கொடுத்தாரா, அதுவும் இல்லையே! கமிட்டியின் கூட்டத்திற்கும் வரவில்லை, கூட்டம்

(11-ம் பக்கம் பார்க்க)

அண்ணாதுரை காங்கிரசில் சேருவதா? முற்றிலும் பொய்!

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

னால்தவிர நம்மீது எத்தகைய பழிச்சொல்லையும் வீசமுடியாது என்ற முடிவுக்கு அவர்கள் வந்திருக்கிறார்கள், ஆதலாலேதான், அவர்கள், அண்ணா, தலைமைப் பதவியைப் பெறுவதற்காகத்தான்; இந்த எதிர்ப்பை உண்டுபண்ணியிருக்கிறார் என்று பொய்யுரை புகன்று, மக்கள் கவனத்தை திருமணப் பிரச்சினையிலிருந்து வேறு பக்கம் திருப்பிவிடப் பார்க்கிறார்கள். ஆம்! அண்ணா அவர்கள் தலைமைப் பதவியைப் பறிக்கப் பார்க்கிறார் என்று அவர்கள் பேசுவது. திருமணக் கொடுமையை, பெரியாரின் பெருந் தவறை மறைப்பதற்கு அவர்கள் கையாளும் தந்திரமே தவிர, சூழ்ச்சியே தவிர, வேறொன்றும் இல்லை.

"தினச் செய்தி" என்ற பெயருடைய சென்னை காங்கிரஸ் தினசரி ஒன்று, அண்ணாதுரை இனி காங்கிரசில் சேரக்கூடும் என்றும், அப்படிச் சேருவதை கட்சியில் உள்ள இளைஞர்கள் விரும்பவில்லை என்றும் ஒரு திராவிடர்கழக முக்யஸ்தர் தெரிவித்ததாக, இந்த வாரம், திருபர் சரடு ஒன்றை வெளியிட்டிருக்கிறது. நாம் தெளிவாகத் தெரிவித்துவிட விரும்புகிறோம், **இந்தத் தகவல்கள் முற்றிலும் பொய்யானவை.** அண்ணாதுரையோ, அல்லது பெரியாரின் பொருந்தாத் திருமணத்தைக் கண்டு, உள்ளம் நொந்து, அவருடன் இனியும் ஒன்றாக இருந்து ஒத்துழைத்து வேலைசெய்ய மனம் ஒப்பாமல் அவரைவிட்டு விலகிநிற்கும் ஏனைய பல்லாயிரம் திராவிடப் பொது மக்களோ, **வேறு கட்சியில் சேருவதுஎன்பதைப் பற்றி நினைத்துக் கூடப் பார்க்கமாட்டார்கள். அதுவும் வேடிக்கைக்காகக்கூட, விளையாட்டுக்காகக் கூட, கனவில்கூட, அப்படி எண்ணிப் பார்க்கமாட்டார்கள். ஏனெனில் இப்போது ஏற்பட்டுள்ள பிரச்சினையே திராவிடர் கழகக் கொள்கைகள் சரியா அல்லவா என்பது அல்ல; திராவிடர் கழகத்தின் தலைவராக இப்போதிருப்பவர் தவறிவிட்ட காரணத்தால் இனியும் அவரை நாம் தலைவராக ஏற்றுக் கொள்ள முடியுமா இல்லையா என்பதுதான்.** மற்ற எந்தக் கட்சியின் கொள்கைகளையும் விட திராவிடர் கழகக் கொள்கைகளே சிறந்தவை—சீரியவை—நாட்டுக்குத் தேவையானவை என்னும் திண்ணமான முடிவிலே இப்போது பெரியாரிடமிருந்து விலகிநிற்கும் நமக்கு எள்ளளவும் ஐயம் கிடையாது. கழகத்தின் கொள்கைகளைப் பரப்புவதிலே, மறுமலர்ச்சி சகாப்தத்தை உருவாக்குவதிலே சற்றேனும் சளைப்பவர்கள் அல்ல பெரியாரிடமிருந்து விலகிநிற்கும் நாம். பகுத்தறிவுப் பணி புரிவதிலே இனியும் நாம் சிறிதும் தளர்ச்சியடைய மாட்டோம்; சற்றேனும் களைப்படைய மாட்டோம். ஆனால் இந்தத் தலைவர் அவர்கள் நம் உள்ளத்தைப் புண்படுத்திவிட்ட காரணத்தால், அவர் நாவினால் சுட்ட வடு நம் நெஞ்சைவிட்டு அகல மறுக்கும் காரணத்தால், ஆயிரமாயிரம் தொண்டர்களின் கண்ணீரை அவர் விஷமப் பிரசாரம் என்று வீணாகக் கேலி செய்த காரணத்தால், ஒரு பொருந்தாத் திருமணத்தைக் கைவிடும் அளவுக்குக்கூட அவர் நம்மை மதிக்காத காரணத்தால் அவரை விட்டு விலகிநிற்கிறோம். அது மட்டுமல்ல, அவர் திராவிடர் கழகத் தலைவராக இருக்கும் வரை கழகப் பணியிலிருந்தும் ஒதுங்கியிருப்போம். ஆனால், கழகக் கொள்கைகள்! அவற்றை விட்டு எப்போதும் பிரியமாட்டோம்! பகுத்தறிவுத் தத்துவங்கள்—அவற்றைவிட்டு எப்போதும் ஒதுங்கமாட்டோம்! சுயமரியாதை இயக்கக் கருத்துக்கள்—ஆம்! அவையும் நாமும் என்றென்றும் இணை பிரியாத் தோழர்கள்! ஆரியமாயையை அழிக்கும் போராட்டம்-அதில் ஒன்றும் இனியும் நாம் சளைத்து விடமாட்டோம்! ஆனால் நம்மை நம்பாத தலைவர்—அவரை நாம் இனி நம்பமுடியாது—அவ்வளவுதான்! நம்மை மிக இழிவான சொற்களாலே அர்ச்சிக்கும் தலைவர்—அவரை நாம் மிக உயர்ந்த வாசகங்களாலே போற்றிப் புகழ முடியாது—அவ்வளவுதான்!

* * *

"மதிப்பிற்குரிய தலைவர் பெரியார் அவர்களே,

வணக்கம் பல. திருமணம் முடிந்து விட்டதாமே! நீங்கள் செய்துள்ள செயல்—வேதனை தரும் செயல்! எனது இளம் உள்ளம் இம்முடிவைக் கண்டு வேதனையால் விம்முகிறது. நீங்கள், இத்தனை ஆயிரம் பேரின் கண்ணீரை, உள்ளக் குமுறலை அலட்சியம் செய்துவிட்டு திருமணம் செய்து கொள்ளவேண்டிய அளவுக்கு இந்த மணத்திற்கு ஏதாவது நியாயமான காரணம் இருக்க முடியுமா என்று சிந்தித்துச் சிந்தித்துப் பார்த்தேன்—விடை ஏதும் கிடைக்கவில்லை விடைக்குப் பதில் அழுகைதான் பீறிட்டெழுந்தது. பொன்னான இயக்க வரலாற்றில் கறை படிந்ததை எண்ணுந்தோறும்.. தலை குனிய வேண்டியவர்களானோமே என்ற துயரம்தான் எழும்புகிறது. **தளபதி அழகிரிசாமி இந்த வேதனைக் காட்சியை—துயர் எழும்பும் சம்பவத்தைக் காணாது முன் கூட்டியே மறைந்துபோன பெரும் பேற்றை நானும் அடைந்திருக்கக் கூடாதா என்று எண்ணிக் கலங்குகிறேன் நான்.**

(6-ம் பக்கம் பார்க்க)

நாவினால் சுட்ட வடு என்றென்றும் ஆறாதே !

(12-ம் பக்கம் தொடர்ச்சி)

துக்கேட்குமே! மறப்பதாமே விஷமிகள் என்று தூற்றப்பட்ட சோக கட்டத்தை! எப்படிதான் அது முடியும்?

"கட்சியில் இருக்கும் எவரிடமும் எனக்கு நம்பிக்கையில்லை—நீங்கள்தான் சொல்லுங்களேன் யார்இருக்கிறார்கள் என் நம்பிக்கைக்குப் பாத்திரமாகும் தகுதி பெற்றவர்கள் ?" என்று பெரியார் கோவை மாநாட்டிலே, பல்லாயிரவர் எதிரிலே, பச்சையாகச் சொன்னாரே, அந்த வாசகத்தைக் கூடவா மறந்துவிட முடியும் ? பொது வாழ்க்கைப் பலிபீடத்தில் தங்கள் குடும்பத்தையே, குடும்ப வாழ்க்கையையே, குடும்பசுகத்தையே அர்ப்பணித்தவர்கள் உண்டே நூறு நூறு ஆயிரம் அவர்கள் உள்ளம் தூள் தூளாய் உடைந்து சிதறுமே இந்த வாசகத்தைக் கேட்டால் ! இந்த வாசகத்தையுமா மறக்கமுடியும்? மறந்துவிட்டுப்பணி வேறு புரியவேண்டுமாமே! ஐக்கியமாகவேறு இருக்க வேண்டுமாமே! இனித்தான் அதிக தியாகங்கள் செய்யவேண்டி இருக்குமாமே! நம்மை நம்பமுடியாது என்று உரைத்தவரை நாம் நம்ப வேண்டுமாமே! நம்மைச் விஷமிகள் என்று தூற்றியவரை நாம், நம் தலைவர் என்று போற்ற வேண்டுமாமே ! அவர் சிறைக்குப் போகப் போகிறாராம்—எனவே நாம் ஓடோடிவந்து, அடியேன் தண்டம்என்று அவர்காலில் வீழ்ந்து பணிந்து எழுந்து நின்று தாசானு தாசனாக இருக்கவேண்டுமாமே ! அவர் சிறைபுகுந்து விடுவதாலேயே, அவர், இழிமொழி என்னும் கட்டாரி கொண்டு குத்தி நம் உள்ளத்தில் ஏற்படுத்தி உள்ள ரணகாயம் எப்படி மறைந்து போகும்? **சிறைவாசம் எனும் பிளாஸ்திரி போட்டு விடுவதாலேயே இந்த ரணகாயம் மறைந்து போகாதே!**

எல்லாவற்றையும் மறந்துவிட்டு மீண்டும் கட்சிப் பணியிலே தீவிரமாக ஈடுபடவேண்டுமாம் ! கூறுகிறது **விடுதலை** ! எந்த "விடுதலை" தெரியுமா?

நம்மை **சதிகாரர்கள்** கூட்டம் என்று உள்ளம் துணிந்து கூறிய விடுதலை !

விஷமப் பிரச்சாரம் செய்யும் எதிரிகள் என்று நம்மை விஷம்போன்ற சொற்களால் சித்தரித்த விடுதலை!

சுயநல கும்பல் இது என்று சளைக்காமல் இருவாரகாலம் சரி கம பத நிச பாடிய விடுதலை!

ஆபாசமான, கீழ்த்தரமான செய்திகளைக் கூறி உளறிக் கூத்தாடுபவர்கள் என்று நமக்குப் பட்டாபிஷேகம் செய்த மேன்மை தங்கிய விடுதலை!

எந்தவிஷயம் ஏற்பட்டாலும் ஒருவரை ஒருவர் அழுத்தி தந்நலம் சாதிக்கவே கூடி இருப்பவர்கள் என்று 'ஒற்றுமைத் தத்துவம்' பேசிய தத்துவ ஞானி விடுதலை!

'**உஷார்! ஜாக்கிரதை! இவர்களை நம்பக்கூடாது!**" என்று போலீஸ் வேடம் பூண்டு கர்கூவெனக் காட்டுக் கூச்சல் இட்ட விடுதலை!

அந்த விடுதலையேதான். இப்போது நடந்ததை மறந்துவிட்டு நற்பணி புரியவாரீர் என அழைக்கிறது! மனம்போன போக்கில் கண்டபடி தாக்கிவிட்டு இப்போது சமரச கீதம் பாடுகிறது இந்த ஏடு! 9—7—49 அன்று இன்னமுமா விளக்கம் தேவை எனற தலைப்பைப் போட்டுக்கொண்டு **ஒரு புரட்சி நடத்துவதில் வெற்றிபெற்றுவிட்டதாக மனப்பால்குடிக்கும் சதிகாரர்கள்** என்று நம்மைத்தாக்கிய 'விடுதலை' 11—7—49 அன்று, அதாவது மறுநாளுக்கு மறுநாள், நாம் அனைவரும் ஐக்கியமாகப் பணி புரிய வேண்டாமா என்று மகுடிவாசிக்கிறது அதுவும் முதல்நாளுக்கு முன்னாள நம்மீது வீசிய வீண்பழிக்காக மன்னிப்புக்கூட கேட்காமல்! என்ன நெஞ்சுத் துணிச்சல்!

மறக்கவேண்டுமாமே மறக்க! மறந்து தொண்டாற்ற வேண்டுமாமே தொண்டு! அழைக்கிறதே விடுதலை! ஏன் அழைக்கிறது நம்மை ? ஒருமுறை சதிகாரக் கூட்டம் என்று நம்மைத் தூற்றியது போதாது மீண்டும் அந்தப் பட்டமளிப்புவிழா நடத்தி நம்மைப் பட்டதாரிகள் ஆக்குவதற்கா? நம்மைச் சதிகாரர்கள் என்று தூற்றிய பெரியார் அவர்களுடன் ஐக்கியமாக இருந்து இனியும் பணியாற்றுவதன் மூலம் இன்னம் மிச்சம் மீதியாக அகராதியில் இருக்கும் நல்லன அல்லாத சொற்களை அவர் நம்மீது வீசுவதற்கு நாம் மீண்டும் வசதி செய்து தரவேண்டும் என்பது 'விடுதலை'யின் கருத்தா? இல்லையானால் ஏன் மீண்டும் நம்மை அழைக்கிறது ?

நேற்று மனம் போனமட்டும் நம்மைத் தூற்றிவிட்டு, இன்று "சமரச கீதம் பாடுவதுபோலப் பாவனை செய்யும் "விடுதலை"யே! நீ கூறு பெரியார் அவர்களுக்கு! பெரியார் எங்களுக்குத்தந்திருக்கிறாரே அரிதினும் அரியதோர் கேடயம், திருக்குறள், பகுத்தறிவுப் பொக்கிஷம், அதிலே ஓர் அழகான பாட்டு இருக்கிறது. உனக்குத் தான் நன்றாகத் தெரியுமே, நாலாறு மாதங்களாகத்தான் குறளின் அருமைபெருமையை தரணிக்கெல்லாம எடுத்தோதி வருகிறாயே, குறள்பாட்டு ஒவ்வொன்றும் இரண்டே வரிகள் தான், எனவே நாம் குறிப்பிடும் பாட்டை நீ பெரியாரிடம் கொண்டு செல்ல அதிக சிரமப்பட வேண்டியதில்லை. எது தெரியுமா நாம் குறிப்பிடும பாட்டு ?

தீயினால் சுட்ட புண்
உள் ஆறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு

என்று இருக்கிறதே அதுதான் ! உடலிலே தீயினால் சுட்டால், அந்தப் புண் இன்றில்லாவிட்டால் இரண்டொரு நாள் பொறுத்து, இரண்டொரு நாள் பொறுத்து இல்லாவிட்டாலும் இரண்டொரு மாதங்கள் பொறுத்து ஆறிவிடும். பிறகு நாளடைவில், அந்தப் புண் இருந்த அடையாளம்கூட மறைந்து போகும். ஆமாம்! ஆனால்இந்த நாக்கு இருக்கிறதே நாக்கு இதனாலே ஒருவர் உள்ளத்தைச் சுட்டுவிட்டால், அங்கு ஏற்படும் புண் இருக்கிறதே, அது என்றென்றும் ஆறாது! பெரியாருக்கு, விடுதலையே, இந்தப் பாட்டைக் கொண்டு செல்லு. நீ கொண்டு செல்லக் கூடவேண்டாம், அவரிடமே குறள் புத்தகங்கள் கட்டுக் கட்டாக இருக்கின்றன, அங்கே சென்று, குறள் சுவடி ஒன்றைத் திறந்து இந்தப் பாட்டு இருக்கும் பக்கத்தை அவருக்குத் திறந்து காட்டு. அது போதும் விடுதலையே, எங்கள் ஆதரவாலே அன்பாலே பணத்தாலே போஷிப்பாலே வளர்ந்த விடுதலையே, எங்கட்கு நீ செய்யவேண்டிய கடைசி உதவி இதுதான்—இனி, உன்னிடமிருந்து நாங்கள் எந்தவித உதவியும் எதிர்பார்க்க முடியாது ! நீதான் எங்கள் அனைவரையும் சதிகாரர்கள் என்று கூறிவிட்டாயே—சதிகாரர்கட்கு

நாம் சிந்தும் கண்ணீர் தலைமையைப் பறிக்கும் தந்திரமாம்!

எப்படி உதவமுடியும் பாவம்! நீ உதவ எண்ணினாலும் பெரியார் அனுமதி அளித்தால்தானே உன்னால் உதவமுடியும்! அது தவிர உனக்கு ஏது தனி உரிமை? எனவே "விடுதலை"யே, இந்தக் குறட்பாவை மட்டும் பெரியாருக்குக் கூறு! கூறுவாயா தோழா! ஒருக்கால் தோழா என்று அழைத்தால் கூட கோபித்துக் கொள்வாயோ, சதிகாரர்களாகிய நீங்கள் என்னை தோழா என்று எப்படி அழைக்கலாம் என்று கேட்பாயோ? கேட்க மாட்டாய் அல்லவா! சரி! போ! போய், பெரியாரைப் பார்த்துக் கேள், நீங்கள்தான் அவர்கள் அனைவரையும் சதிகாரர்கள் என்று என்மூலமாகவே அன்று தாக்கிவிட்டீர்களே அவர்களில் ஒருவரிடம்கூட எனக்கு நம்பிக்கை இடையாது என்பதையும்தான் என்மூலமாகவே எழுதிவிட்டீர்களே, அந்த ஆயிரமாயிரவர் விருப்பத்திற்கும் வேண்டுகோளுக்கும் சிறிதும் செவி சாய்க்காமல் இந்தப் பொருந்தாத் திருமணத்தையும்தான் நீங்கள் செய்துகொண்டு விட்டீர்களே, பெரியார் திருமணத்தை நிறுத்திவிடவேண்டும்—இல்லையேல் நாங்கள் ஒதுங்கியே இருப்போம் என்று அவர்கள் கூறியதை அலட்சியம் செய்து மணமும் நடத்திவிட்டீர்களே, இப்போது ஐக்கிய முரசு கொட்டும்படி என்னையே ஏவுகிறீர்களே; எப்படி வருவார்கள் மனம் புண்ணாகிக் கிடக்கும் அந்தத் தொண்டர்கள் என்று கேள். நீங்கள் அவர்களின் கண்ணீரையும் கண்டனத்தையும் உதாசீனம் செய்து உதறித் தள்ளினீர்களே அவர்கள்மட்டும் நீங்கள் கூப்பிட்ட குரலுக்கு வரவேண்டுமென்று ஆசைப் படுகிறீர்களே, இது நியாயமா என்று கேள். கட்சிக் கொள்கைக்கு மாறாக நடந்திருக்கிறீரே தலைவரே—இது தருமா என்று கேள். போய்வா. பிறகு, முடியுமானால் சந்திப்போம்......

* * *

'விடுதலை' பெரியாரிடம் சென்று இந்தக் கேள்விகளை தைரியமிருந்தால், கேட்கட்டும்! அதே நேரத்தில் நாங்கள் உங்களைக் கேட்க ஆசைப்படுகிறோம், உங்களில் ஒருவராவது இனியும் நாம் பெரியாருடன் ஒத்துழைப்பது சாத்தியம் என்று கருதுகிறீர்களா? அவருடைய திருமணம் கட்சியின் புனிதத் தன்மைக்கு இழுக்குத் தருவது என்பதை எடுத்துக்காட்டிய இத்தனை ஆயிரம் பேரையும் அவர் **சதிகாரர்கள்** என்று மனம் கூசாமல், வாய் கூசாமல், சொல்லிவிட்ட பிற்பாடும் நாம் அவருடைய தலைமையை ஏற்றுக்கொள்வது நியாயம் என்று எண்ணுகிறீர்களா? இவ்வளவுக்கும் பிறகு அவரை நம் தலைவர் என்று நாம் எப்படித்தான் சொல்லிக்கொள்ள முடியும்? 9-7-49 சனிக்கிழமையன்றும் நம்மை சதிகாரர்கள் என்று தூற்றிவிட்டு, 11-7 49 திங்களன்று ஒத்துழைக்க வாருங்கள் என்று "விடுதலை" அழைக்கிறது என்றால் இந்த அழைப்பு எவ்வளவு நயவஞ்சகமானது, நல்லோர் உள்ளத்தைப் புண்படுத்தக் கூடியது என்பதை எவரும் அறிவர். எனவே இந்த அழைப்பிலே அர்த்தமும் இல்லை, நேர்மையும் இல்லை. நாம் இதைப் பொருட்படுத்தத் தேவையும் இல்லை.

அண்ணா அவர்கள், தலைமைப் பதவியைக் கைப் பற்றுவதற்காகவே, இந்தத் திருமணப் பிரச்சினையை இவ்வளவு பெரிதாக ஆக்கிவிட்டார் என்றும், இது தெரியாமல், ஏராளமானவர்கள், ஏமாந்துபோய் அவர் விரித்துள்ள மாயவலையில் சிக்கிக் கொண்டு பெரியாரைத் தாக்குகிறார்கள் என்றும் சிலர் எழுத ஆரம்பித்திருக்கின்றனர். இதைவிட உண்மைக்கு நேர்மாறான கூற்று வேறு ஒன்று இருக்கமுடியாது. சென்ற ஆண்டு அக்டோபர் மாதம் ஈரோட்டிலே நடைபெற்ற மாகாண திராவிடர் கழக மாநாட்டை பெரியார்தான் கூட்டினார், அந்த மாநாட்டிற்கு அண்ணா அவர்கள்தான் தலைவர். அந்த மாநாட்டிற்கு அண்ணாதான் தலைமை தாங்கவேண்டுமென்று வற்புறுத்திக் கூறியவரும், ஏற்பாடு செய்தவரும், அந்த ஏற்பாட்டை நிறைவேற்றிவைத்தவரும் இதே பெரியார்தான். மாநாட்டிலே கடலென ஈண்டியிருந்த மக்கட் கூட்டத்தின் முன்னே, வெளிப்படையாக, "பெட்டிச் சாவியை (இயக்கத் தலைமையை) அண்ணாவிடம் கொடுக்கத் தீர்மானித்துவிட்டேன்—இன்னமும் எத்தனை நாட்களுக்குத்தான் நானே சாவியை (தலைமையை) வைத்துக்கொண்டு அலைந்து திரிந்து கொண்டிருக்க முடியும்? மேலும் வயதுவந்த மகனிடம் சாவியைக் கொடுக்கவேண்டியதுதானே நியாயம்" என்று பேசியவரும் இதே பெரியார்தான். அண்ணா அவர்கள் இலட்சக்கணக்கான இளைஞர்கள் உள்ளத்தைக் கைப்பற்றிவிட்டார் என்றும், அவர் இந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கவேண்டும் என்பதே எல்லோருடைய விருப்பமும் என்றும், என்னுடைய ஆசையும் அதுதான் என்றும் பேசியவரும் இதே பெரியார்தான். இவ்வண்ணம் ஈரோட்டு மாநாட்டின்போது, பெரியாரின் பரிபூரண நம்பிக்கைக்குப் பாத்திரமானவராக பெரியாராலேயே சித்தரிக்கப்பட்ட அண்ணாதுரை அந்த மாநாட்டிற்குப் பிறகு எந்தச் சிறு பிரச்சினையிலும் பெரியாரிடமிருந்து மாறுபட்டார் என்றோ வேறுபட்டார் என்றோ கூறுவதற்கு இல்லை. ஈரோடு மாநாட்டிற்குப் பிறகு, இந்தி எதிர்ப்புப் போர் பெரியாரால் மும்முரமாகத் தொடங்கப் பட்டது—அதிலே அண்ணா பங்குகொள்ளத் தவறவில்லை. பிறகு குடந்தையிலே உரிமைப் போராட்டம் தொடங்கப்பட்டு மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது—அதிலும் அண்ணா பங்குகொள்ளத் தவறவில்லை. அதன் பிறகு ஜனவரி மாதம், சென்னையில், திருக்குறள் மாநாடு நடத்தினார் பெரியார்—அந்த மாநாட்டிலும் அண்ணா மகிழ்ச்சியுடன் கலந்துகொண்டு, பெரியாரின் திருக்குறள் தொண்டு ஒப்பற்றதோர் பணி என்று பாராட்டிப் பேசியிருக்கிறார். அதற்கும் பிறகு, ஈரோட்டிலே, அர்ச்சுனன் கிணவுப்பள்ளி நிதிக்காகச் சில பல ஏற்பாடுகள் செய்யப்பட்டபோது சந்திரமோகன் நாடகத்தை நடத்தி அந்த நிதிக்குப் பணம் சேர்த்துக் கொடுத்தார் அண்ணா—அந்த நாடகத்திற்குத் தலைமை வகித்தார் பெரியார்.

இவ்வண்ணம், ஈரோடு மாநாட்

(8-ம் பக்கம் பார்க்க)

தளபதி அழகிரிபோல் நாமும் மாண்டிருக்கக்கூடாதா?

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நீங்கள், இந்தத் தகாத முடிவின் காரணமாக, இளைஞர்களின் அன்பை, ஆதரவை, இழந்துவிட்டீர்கள். தன்மானத் தமிழனைக வாழவேண்டி, நான், உங்களது முடிவை, திருமணத்தைக் **கண்டிக்கிறேன்**...உங்கள் தலைமையின்கீழ்ப் பணியாற்றுவதிலிருந்து **விலகுகிறேன்**. ஆனால்... என் தொண்டு!...... அதை நிறுத்தமாட்டேன்! நீங்கள் கற்றுக் கொடுத்த பகுத்தறிவுப் பாடம்......அதை மறக்கமாட்டேன்!

மன்னிக்கவும்.

அன்பன்

தன மனோகரன்

* * * *

பெரியாரின் திருமணம் முடிந்துவிட்டது என்பதைக் கேள்விப்பட்டதும் மனம் பதறிப்போன நம் இயக்கத் தோழர்கள் எண்ணற்ற பேரிடமிருந்து பெரியாருக்கு அனுப்பப்பட்ட கடிதங்களிலே ஒன்று, இது! கடிதமா இது? அல்ல! அல்ல! இயக்கத் தோழரின் உள்ளம்! தன மனோகரனின் கண்ணீர்! அவர் மனதை அரிக்கும் வேதனை!

தனமனோகரன், சென்னை சைதாப்பேட்டையில் வாசிக்கும் மாணவத் தோழர். அந்தத் தோழரின் உள்ளத்தை பெரியாரின் திருமணச் சேதி எவ்வளவு துயரத்திற்கு ஆளாக்கிவிட்டது என்பதைத்தான் இந்தக் கடிதம் தெள்ளத்தெளிய விளக்குகிறது.

பெரியாருக்கு அனுப்பப்பட்ட இக் கடிதத்தின் நகல நமக்குக் கிடைத்து, எழுத்தினை விழிகள் தாவ, இதயத்தால் அதை வாசித்தபோது, நம் இதயத்தின்மீது யாரோ ஆயிரம் ஈட்டி முனைகளாலே குத்துவது போல இருந்தது, அவ்வளவு துயரத்தை நம் உள்ளத்திலே ஊன்றிவிட்டது இக்கடிதம்.

தளபதி அழகிரியைப் போல நான் முன்னமே மாண்டிருக்கக் கூடாதா, இந்தக் கோராமையைக் காணாமல் இருப்பேனே, என்று தனமனோகரன் கதறி அழுவதைக் காணும்போது, இது போலவெல்லாம் புலம்பி யழும் தனமனோகரன் ஒருவர் அல்ல, நூறு நூறாயிரம் என்பதை எண்ணும்போது நம் உள்ளம் பிளந்து விடும்போல் இருக்கிறதே!

அந்தோ! எவ்வளவு விறு விறுப்பாக வளர்ந்துவந்த இயக்கத்தை இந்தக் கோலத்திற்கு ஆளாக்கினார் ஈ. வே. ரா!

அடடா! எவ்வளவு சிறப்பாகத் தழைத்தது இயக்கம்! எவ்வளவு அருமையாக வளர்த்தோம் இந்தக் கட்சியை! மாற்றாரும் வேற்றாரும் எவ்வளவு நடுங்கினர் இந்த இயக்கத்தின் வளர்ச்சியைக் கண்டு! கடைசியில் இந்த இயக்கத்தைக் கட்டிக் காத்த தலைவரே இந்த இயக்கத்திற்கு சவக்குழி பறிக்க முன்வந்து விட்டாரே!

என் செய்வோம் நாம்! ஏங்கிப் புலம்பும் தனமனோகரன்களுக்கு என்ன பதில் கூறுவோம்! சீச்சீ! நம் நிலைமை இப்படியா ஆகவேண்டும்?

பெரியார் பெரியார் என்று ஓயாமல் உழைத்தோமே, கடைசியில் விஷமிகள் என்ற வீண் பழியை அல்லவா சுமத்துகிறார் அவர்! எவ்வளவு நெஞ்சுத் துணிவு அவருக்கிருந்தால், எவ்வளவு இறுகிப்போன மனம் அவருக்கு இருந்தால், இப்படி **மனதறிந்த பொய்யை** உரைப்பார்! ஒரு தலைவர் அல்ல, ஒரு பெரியார் அல்ல, ஒரு சாதாரண மனிதர்கூட இவ்வளவு துணிகரமாகப் பொய் உரைக்கமாட்டாரே! நினைத்தால் நெஞ்சு பதறுகிறதே! வேளா வேளைக்கு உணவின்றி, பகல் தூக்கம் இராத்தூக்கம் இன்றி, உடல் நிலை கெடுவதையும் பொருட்படுத்தாமல், கட்சி நலத்திற்காக மட்டுமல்ல, இவர் நலத்திற்காகவும் நாம் எவ்வளவு பாடுபட்டோம்! எவ்வளவு பணியாற்றினோம்! எங்கெந்தப் பட்டி தொட்டியெல்லாம் சென்று தொண்டாற்றினோம்! இவ்வளவுக்கும் இவர் தரும் பரிசு சதிகாரர் என்ற பட்டம்!

தூய உள்ளமும் தூய பணியும் படைத்த நமக்கு நம் மாஜி தலைவர் தரும் அன்பளிப்பு விஷமிகள் என்ற சொல் வீச்சு!

தோழர்களே, கலங்காதீர்கள். மனம் உடையாதீர்கள். சிறிதும் வருந்தாதீர்கள்.

தோழர் ஈ. வெ. ரா. வைப் பெரியார் ஈ. வெ. ரா. ஆக்கிற்று நம் உழைப்பு! நம் வியர்வை! நம் கண்ணீர்! நாம் பட்டபாடு! இன்று அந்தப் பெரியார் ஈ. வெ. ரா. நம் தூய்மையின் மீது வீண்பழி சுமத்துகிறார். மனதை முறிக்கும் சம்பவம் தான் இது! என்றாலும் கலங்காதீர்கள். கண்ணீர் சிந்தாதீர்கள்.

நாடு நம்மைத்தான், நம் பணியைத்தான் எதிர்பார்க்கிறது.

நாம் மீண்டும் பணி புரியும் நாள் என்று வரும் என்றுதான் தமிழகம் மிக ஆவலுடன் நம் நடவடிக்கைகளைக் கண் சிமிழ்க்காமல், வைத்த கண் வாங்காமல் கவனித்துக் கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் பகுத்தறிவுப் புயல் எழுப்பும் வேலை நம்மைத்தான் இருகை நீட்டி அழைத்துக்கொண்டிருக்கிறது.

மக்கள் மன்றத்தில் நம்முடைய சுயமரியாதை சங்கநாதம்

கண்ணீர் குறையட்டும்! பிறகு, கூடிக் கலந்து பேசுவோம்!

மீண்டும் முழங்கும் மங்கல நாளுக்காகத்தான் இளைஞர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

பெரியார் நம்மை விஷமிகள் என்று மனம் துணிந்து ஏசுகிறார்—ஆனால் அதற்காக, நாட்டுக்குப் புரியவேண்டிய நற்பணியை நாம் மறந்துவிடக் கூடாது.

பெரியார் நம்மை என்ன வேண்டுமானாலும் சொல்லி, எப்படி வேண்டுமானாலும் ஏசட்டும். நாம் அவரைத் திருப்பி ஏசக்கூடாது. ஏசுவதற்கு நமக்கு நேரமில்லை. நாம் மக்களுக்குப் பணி புரிந்தாக வேண்டும். மக்களுக்குச் செய்ய வேண்டிய பணி ஏராளமாக இருக்கிறது. நம் வாழ்நாள் முழுவதும் புரிந்தாலும் மேலும் மேலும் செய்யவேண்டிய பணி, மலைபோல இருந்துகொண்டேதான் இருக்கும். எனவே, வீணாக, பெரியார்மீது யாரும் எந்தவித கண்டனமும் தெரிவிக்கவேண்டாம். அவர் நம்மை எவ்வளவு தாக்கினாலும் சரி, நாம் திருப்பி அவரைத் தாக்குதல் மொழிக்கு ஆளாக்கக் கூடாது.

அண்ணா அவர்களின் தெளிவான அறிக்கை வேறு ஓர் பக்கத்தில் வெளிவந்துள்ளது. அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டிருப்பதைப்போல, தெளிவும், அமைதியும், திடமனதும்தான், முக்கியமாகத் தேவை. இவை கெடும் விதமான எந்தக் காரியத்திலும் எவரும் ஈடுபடலாகாது.

பெரியாரிடமிருக்கும் கட்சிப் பணத்தைப் பற்றியோ நாம் சிறிதும் கவலைப்படத் தேவையில்லை. அந்தப் பணத்தையும் சொத்துகளையும் பொதுநலனை முன்னிட்டு அவரிடமிருந்து சட்ட ரீதியாகக் கைப்பற்றி கட்சிக்குத் தரவேண்டும் என்ற எண்ணம் யாருக்காவது இருக்குமானால், அவர்கள், உடனே அந்த எண்ணத்தைக் கைவிட்டு விடவேண்டும். அந்த சொத்துகளையும் பணத்தையும்தான் அவர் பெரிதாக மதிக்கிறார். அவற்றை தாராளமாக அவரே வைத்துக்கொள்ளட்டும்.

நமக்கு முக்கியம் சொத்து அல்ல, கொள்கை! எனவே நாம் சொத்தைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. சொத்து நமக்கு வேண்டாம். நம் உழைப்புதான் நமக்குச் சொத்து. நம் உடல்தான் நமக்கு ரூபா அணா பைசா. சொத்து அவரிடமே இருக்கட்டும். கொள்கை நமக்குப் போதும்.

நம்மை சூதர்கள் என்றும் விஷமிகள் என்றும் வீண் அவதூறான வாசகத்தையும் அபாண்டமான பொய்யுரையையும் புகல்வது மன்னிக்கமுடியாத குற்றம் மட்டுமல்ல பொது வாழ்வில் ஈடுபடுவோர் யாரும் செய்யக்கூடாத காரியம். இதை பெரியாருக்கு நாம் எடுத்துக் காட்டத் தேவையில்லை. அவருடைய மனச் சாட்சியைக் கேட்டுப் பார்த்தால் அது கூறும் அவருக்கு இவ்வண்ணம் துணிந்து வீண்பழி கற்பிப்பது எவ்வளவு தவறு என்பதை!

திருமண விஷயத்தில்தான் பெரியார் தவறிவிட்டார் என்று நாம் நினைத்தோம். ஆனால் அவர் பொது வாழ்வில் ஈடுபடுவோரிடம் இருக்கவேண்டிய கண்ணியத் தன்மையிலிருந்து கூட தவறிவிட்டார் என்பது இப்போதுதான் நமக்குத் தெரிகிறது.

தூற்றட்டும் தோழர்களே அவர் தூற்றட்டும்! மனம்போன மட்டும் தூற்றட்டும்!

ஆனால் நீங்கள் எந்தக் காரணத்தை முன்னிட்டும் அமைதியை இழந்துவிடக்கூடாது.

ஆத்திரம் கூடாது.

உடனடியாக திராவிடர் கழகத்தைவிட்டே விலகிவிடலாம் என்றோ, அல்லது உடனே பெரியாரின் தலைமையை நீக்கியாகவேண்டும் என்றோ துடிதுடிக்கக் கூடாது.

நம் மனதை மிகவும் புண்ணாக்கிவிட்ட காரணத்தால் **பெரியாரிடமிருந்து விலகிநிற்கிறோம்** என்பதை மட்டும் இப்போது தெரிவித்தால் போதும்.

அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப்போல, திருமணத்தின் காரணமாக நம் உள்ளத்தில் ஏற்பட்டுள்ள வேதனைப் புயல் அடங்கி, அமைதியான சூழ்நிலை ஏற்பட்ட பிறகு கூடிப் பேசுவதே முறை.

அமைதியான சூழ்நிலையில் உருவாக்கும் காரியம்தான் நிலையானதாக இருக்கமுடியுமே தவிர, கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கும் நேரத்திலேயோ வேதனையால் வாடும் இச் சமயத்திலேயோ செய்யப்படும் எந்தச் செயலும் பலன் தருவதாக இராது.

சென்ற இதழில் எழுதியதையே மீண்டும் கூற ஆசைப்படுகிறோம், சில பல நாட்கள் பொறுத்திருப்பதால் எதுவும் கெட்டுப்போய்விடாது.

நம் கன்னங்களில் வழியும் கண்ணீர் சிறிது குறையட்டும்.

நம் உள்ளத்தைக் கொட்டும் வேதனை சற்று மங்கட்டும்.

பிறகு, பெரியாரிடமிருந்து ஒதுங்கியிருக்கும் கழகத் தோழர்கள் அனைவரும் ஒன்றுகூடி, கலந்து பேசி, எதிர்காலத் திட்டத்தை உருவாக்கி, பணி புரிவோம்.

(10-ம் பக்கம் பார்க்க)

அண்ணாவைவிட பெரியாரை அதிகமாக ஆதரித்தவர் யாருண்டு?

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

டிற்குப் பிறகு, இந்தத் திருமணப் பிரச்சினை தோன்றும் வரையில், பெரியார் மேற்கொண்ட ஒவ்வொரு செயல் திட்டத்தையும் ஒவ்வொரு கொள்கை விளக்கத்தையும், அண்ணா பரிபூரணமாக ஆதரித்து மனமாரப் பின்பற்றி வந்திருக்கிறாரே தவிர எந்த ஒரு பிரச்சினையிலும் பெரியாரின் கருத்துக்குமாறாக நடந்து கொண்டாரில்லை.

பொதுவாகவே, அண்ணா, பொது வாழ்வில் ஈடுபட்டு, பெரியாரைப் பின் பற்றி, சமுதாய சீர்திருத்தப் பணியாற்றி வரும் இந்தப் பதினைந்து ஆண்டுகளாக, ஆகஸ்டு 15-ன் போதும், இந்தத் திருமணப் பிரச்சினையின் போதும்தான் பெரியாரின் கருத்து தவறானது என்று எடுத்துக்காட்டியிருக்கிறார். மற்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் பெரியாரின் செயல்களை முற்ற முடிய ஆதரித்து அவருக்கு அருந்துணைவராக இருந்து வந்திருக்கிறார். இந்த இரு சமயங்களில்கூட, பெரியாரின் போக்கு அவர் உள்ளத்தில் தாங்கமுடியாத மனவேதனையை உண்டு பண்ணுவதாக இருந்த காரணத்தால்தான் எதிர்த்து எழுதினாரே தவிர இல்லையானால் எழுதியே இருக்க மாட்டார். **உண்மையை உள்ளது உள்ளபடி கூறுவதானால் பெரியாருக்கு அண்ணாவை விட சிறந்த சிஷ்யர் எப்போதும் இருந்தது கிடையாது.** காந்திக்கு ஒரு ஜவஹர் கிடைத்ததைப்போல, பெரியாருக்கு ஒரு அண்ணா கிடைத்தார் என்று தான் நாம கூறமுடியும். காந்தியார் அவர்கள் உயிருடன் இருக்கும் வரையில், அவரைக் கொஞ்சமும் எதிர்க்காமல், அவருடைய கருத்து தன் கருத்துக்கு மாறானதாக இருந்த போதிலும் கூட, அவரையே முழுக்க முழுக்க ஆதரித்து நிற்கவேண்டியதுதான் தன் கடமை என்று ஜவஹர் எப்படி எண்ணினாரோ, அப்படித்தான் அண்ணா, பெரியார் இருக்கும்வரை, அவரை முற்றிலும் ஆதரிப்பது என்ற திடமனது உடையவராக இருந்துவந்தார். இந்தக் காரணத்தாலேயே, **சிற்சில சமயங்களில் பெரியாரின் போக்குகள் தவறானவை என்பதை நன்றாக அறிந்துகூட, தலைவரைக் காப்பாற்ற வேண்டியதே தன் கடமை என்ற கருத்துடன், அண்ணா, அந்தத் தவறுகளை மறைத்து வைத்து நற்பணி ஆற்றியிருக்கிறார்.** எப்போதும், அண்ணா, பெரியார் தரும் கட்டளைகளை நிறைவேற்றி வைப்பதிலே, அவர் வெளியிடும் புதுக் கருத்துக்களுக்கு ஆதாரம் தேடுவதிலே, அவர் வகுக்கும் கொள்கைகளுக்கு ஆதரவு திரட்டுவதிலே பெரியாருக்கு மேலும் மேலும் பலம் சேர்ப்பதிலேதான் கண்ணும் கருத்துமாக இருந்து வந்தார். பெரியாரிடமிருக்கும் பல உண்மைக் குறைகளைக் கண்டு மனம் புழுங்கிப்போய் பாண்டியன் அவர்களைப்போன்ற சிலர் கட்சியை விட்டே விலகியபோது, அண்ணா, அவர்களிடம் எல்லாம், பெரியாரிடம் இக்குறைகள் இருப்பது உண்மைதான்—என்றாலும் அவற்றை எடுத்துக் கூறி அவர் உள்ளத்தைப் புண்படுத்த வேண்டாம்—அக் குறைபாடுகளால் கட்சிக்கு நேரிடும் ஊனத்தை அவர் காலத்திற்குப் பிறகு திருத்திக் கொள்ளலாம்—இப்போது அவரை முற்றிலும் ஆதரிக்க வேண்டியதுதான் நம் கடமை என்று, எவ்வளவோ வாதாடியிருக்கிறார். இப்படி ஒரு திருமணம் செய்து கொள்ளப் போகிறார் பெரியார் என்பதைக் கேள்விப்பட்டு, மனம் துடிதுடித்தவர்களாய், விடுதலை ஆசிரியர் S. குருசாமி, கே. கே. நீலமேகம் முதலானவர்கள் பெரியாரைநேரில் கண்டு இத் திருமணத்தை விட்டு விடும்படி வற்புறுத்துவதற்காகப் புறப்பட்டபோது கூட, அண்ணா, அப்படிப் புறப்பட்டவர்களிடம், எப்படியாவது அவர் இத் திருமணத்தை விட்டுவிட வேண்டும் என்று வாதாடுங்கள்—கெஞ்சிக் கேளுங்கள்—மிகவும் பணிவாக வேண்டுங்கள்—அவர் மனம் புண்படும்படியாக ஒரு வார்த்தையும் கூறாதீர்கள் என்று பலமுறை வற்புறுத்திக் கூறினார். இந்தச் செய்தி வெளியே தெரியவில்லை இன்னமும்—வெளியே தெரிவதற்குள்ளாக மணத்தை அவர் நிறுத்திவிட வேண்டும் என்று கேளுங்கள்—உங்கள் கண்ணீரால் அவர் மனதைக் கரையுங்கள்—கண்டனச் சொல் தவறியும் சொல்லக்கூடாது என்றுதான் இரண்டாவது தூது குழுவினரிடமும் அண்ணா கேட்டுக் கொண்டார். இந்த இரு தூது குழுக்களும் முற்றிலும் பயனற்றுப் போயின என்பதை நன்றாக அறிந்தபிறகேதான், அண்ணா, பத்திரிகையிலே, இதுபற்றி எழுதலானார்—அப்போதும்கூட மிகமிகப் பணிவாகத்தான்! இத்தகு நிலையினராக அவர் இருக்க, அவரைப் பார்த்து, தலைமைப் பதவியைப் பெறவேதான் இப்படியெல்லாம் செய்கிறார் என்று கூறுபவர்கள், ஒன்று அவரைப் பற்றி ஒன்றுமே அறியாதவர்களாக இருக்கவேண்டும். அல்லது அவர் மீது ஏதோ தனிப்பட்ட மனமாச்சர்யம் அல்லது துவேஷம் அல்லது பகைமை படைத்தவர்களாக இருக்க வேண்டும்.

உண்மையிலேயே, அண்ணா அவர்கள், அவர் இப்போது ஏற்றுக் கொண்டிருக்கும் பொறுப்புகளை தன்னால் தாங்கமுடியாதவை என்று கருதுகிறார். இவற்றிலேயே சில பல பொறுப்புகளை பிறரிடம் பங்கிட்டுத் தந்துவிட விரும்புகிறார். இயற்கையிலேயே ஒருபொறுப்பை ஏற்றுக்கொள்வது என்றால் மிகவும் அஞ்சுகிற இயற்கை படைத்தவர் அவர். நாளையதினமும் அவர் தான் நம்மைத் தலைமைதாங்கி நடத்தியாகவேண்டும் என்ற நிலை ஏற்பட்டுவிடுமானால், நாமாக வற்புறுத்தித்தான் அந்தப் பொறுப்பை அவர்மீது சுமத்த வேண்டியிருக்குமே தவிர அவர் சுலபத்தில் அந்தப் பொறுப்பேற்க இணங்கமாட்டார். இப்படிப்பட்ட இயற்கை படைத்த ஒருவர்மீது, அவராகவே தலைமைப் பதவி என்ற சிறையில் மாட்டிக் கொள்ள சூழ்ச்சி செய்கிறார் என்ற பழிச் சொல்லைச் சிலர் சுமத்தப்பார்க்கிறார்களே, அதன் இரகசியம் என்ன தெரியுமா, அவர்கள் பெரியாரின் திருமணத்தை ஆதரிப்பவர்கள், பெரியாரின் திருமணத்தை ஆதரிப்பவர்களே தவிர, இந்த திருமணம் தவறானது என்பதும், நாம் கூறுவது முற்றிலும் நியாயம் என்பதும், நாம் கூறுவதை மறுத்துக் கூறினால் அதை நாடு நிச்சயமாக ஏற்காது என்பதும் அவர்களுக்கும் நன்றாகத்தெரியும். எனவே நமக்கு ஏதாவது ஒரு தவறான உள்எண்ணத்தைக் கற்பித்துக்கூ

(3-ம் பக்கம் பார்க்க)

அண்ணாதுரை அறிக்கை.

11 - 7 - 49

தோழர்களே,

9-7-49-ல், பெரியார் திருமணம் நடந்தேறி விட்டது.

இந்த ஏற்பாடு, தெரிந்தது முதல், இதனைக் கண்டித்தும், பொருந்தாத் திருமணம் இயக்கக் கொள்கைக்கு முரண் என்றும், இயக்கத்துக்கே களங்கம் ஏற்படுத்தும் என்றும் விளக்கியும், இந்தப் போக்கைப் பெரியார் மாற்றிக்கொள்ளாவிட்டால், அவருடைய தலைமையை ஏற்றுப் பணிபுரிய முடியாதென்றும், விலகி நிற்கிறோம் என்றும், பல நூறு கடிதங்கள் அவருக்கு அனுப்பப் பட்டன.

பல ஊர்க் கழகங்கள் இது போன்ற தீர்மானங்களும் நிறைவேற்றியுள்ளன.

திருமணம் நடந்தாகி விட்டது என்பது தெரியாத நிலைமையில், நிர்வாகக் கமிட்டித் தலைவர், திருச்சி, தென்னூர் தோழர் வேதாசலம் அவர்கள் வீட்டில் நடைபெற்ற நிர்வாகக் கமிட்டியினர் கூட்டத்திலே, இந்தத் திருமணம் கூடாது என்றும், இயக்க நலன் கருதி இதனைப் பெரியார் கைவிட்டுவிட வேண்டுமென்றும் அவரைக் கேட்டுக் கொள்வதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கமிட்டியினர் 32 பேர் வந்திருந்தனர். ஒருவர் மட்டுமே இந்தத் தீர்மானம் தேவையற்றது என்று கூறி, தனித்திருந்தார்.

திருமணமோ நடந்தேறிவிட்டது, இனிச் செய்யவேண்டியது என்ன என்பது பற்றித், திகைப்பும் குழப்பமும், பரபரப்பும் கலந்த நிலையில் ஆயிரக் கணக்கான கழகத் தோழர்கள், கொண்டு வந்து விடப்பட்டுள்ளனர்.

பல திறப்பட்ட யோசனைகளும், யூகங்களும், உலவுகின்றன.

பல வதந்திகள்—குற்றம் கூறல்,—முகாம் பிரித்தல் ஆகியவை பெருகுகின்றன.

கட்சியின் தலைமைப் பதவி, எதிர்கால நடவடிக்கை பற்றி, பலவிதமான, யூகங்கள் உலவுகின்றன.

இவ்வளவும் 'நான்' தலைமைப் பதவியைக் கைப்பற்றச் செய்யும் சூழ்ச்சி என்ற குற்றச்சாட்டும், அதையே ஆதாரமாகக் கொண்டு, என் ஆரூடத்தைக் கணிக்கும் வேலையும் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுபோலவே, பெரியாரைத் தூற்றியும் கண்டித்தும் சில வெளியீடுகளும் உலவுகின்றன.

கொதிப்பும் கொந்தளிப்பும் வளருவது சில பலருக்கு 'இலாபம்' என்ற முறைப்படி, தூபமிடும் காரியம், இருபக்கமும், மும்முரமாக நடைபெறுகிறது.

இந்நிலையில், **தெளிவும் அமைதியும், திட மனதும்** தான், முக்கியமாகத் தேவை.

இவை, கெடும் விதமான எந்தக் காரியத்திலும் எவரும் ஈடுபடலாகாது என்பது என் வேண்டுகோள்.

சூழ்நிலை மேலும் கெடுவதற்கு ஆக்கம் அளிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் திருமணம் நடைபெறுவது கூடாது, இது நிறுத்தப்பட்டு, நாம் எப்பொழுதும் போல், பெரியார் தலைமையிலே கழகப் பணி புரிய வேண்டும் என்ற நல்லெண்ணத்திலிருந்து, சிறிதும் வழுவாதபடியேதான், கடைசிவரை முயற்சி செய்தோம்.

திருமணம் நடந்தேறிவிட்டது. இனிச் செய்ய வேண்டியது என்ன என்பதை, அவசரமும் ஆத்திரமும் இன்றி, தூண்டி விடுவோர், தூபமிடுவோர், சிண்டு முடிந்துவிடுவோர், கண்டதைக் கிளறிப் பார்ப்போர், சந்தி சிரிக்கவைப்பவர் என்போருக்கு இரையாகாமல், யோசித்துத் தீர்மானிக்க வேண்டும்.

இந்தத் திருமணம், இயக்கக் கொள்கைக்கு முரண்பட்டது, இயக்கத்தைக் கெடுக்கக் கூடியது, எனவே, இச்செயலை, கழகத்தவர் ஆயிரமாயிரவர் வேண்டாம் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டும், விடாப்பிடியாகச் செய்து முடித்துவிட்டவரின் தலைமையிலே இருந்து பணியாற்ற முடியாது, அவருடைய தலைமையிலே கழகம் இருக்கும் வரை, கழகப் பணியிலிருந்து விலகியே இருப்போம் என்ற கருத்தை, ஏற்கெனவே தெரிவித்தனர், பலர், பல கழகங்கள் **—அதே முறையில் மேலும், எவ்வளவு கழகங்கள், தோழர்கள் இதே கருத்தைக் கொண்டுள்ளன! என்பதை அறிய ஆவல் கொண்டவனாக இருக்கிறேன்.**

இதை அறியப் பொதுக்கூட்டங்கள் போடுவதோ, கண்டன நோட்டீசுகள், மறுப்புகள் வெளியிடுவதோ, நிலைமையைத் தெளிவு படுத்தாது.

ஆகவே, அவரவர்களும் நிலைமையை நன்றாகச் சிந்தித்து, தனித்தனியாக முடிவு செய்து, தங்கள் முடிவைத் தெரிவிக்கக் கோருகிறேன்.

ஒரு குறிப்பிட்ட அளவு, கழகத் தோழர்கள் இக் கருத்துடன் உள்ளனர் என்பதற்கான ஆதாரம் கிடைத்ததும், அக் கருத்துடையவர்கள் கூடிக் கலந்து பேசி மேலால் எம்முறையில் நடந்து கொள்வது என்பது பற்றி முடிவு செய்யலாம்.

அதுவரையிலே, இந்தக் கருத்தைக் கண்டறியும் காரியந்தான் நடைபெற வேண்டியிருக்கிறது, அமைதியுடன் ஆத்திரமற்ற முறையில்.

இந்தத் திருமணத்தைத் தலைவர் கைவிடாத பட்சத்தில், அவருடைய தலைமையின் கீழுள்ள கழகத்திலே பணியாற்ற முடியாது என்ற கருத்து, ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருப்பது, குறிப்பிடத்தக்கது தான், என்ற போதிலும், மேலும் வேண்டும். அதற்குப் பிறகுதான், அத்தகைய அன்பர்கள் ஒன்று கூடிக் கலந்து பேசி, ஒரு திட்டம் தீட்ட முடியும்.

இதற்கிடையில், பெரியார், உடுமலை வழக்கிலே, சர்க்காருடைய அடக்குமுறைக்கு ஆளாக நேரிடலாம் என்ற செய்தியும் வருகிறது. அவ்விதம் நேரிட்டால், அவருடைய விடுதலைக்குப் பிறகே, நாம் கூடிக் கலந்து பேசுவதும் கண்ணியமான முறை.

விரோதத்தைக் கிளப்பி விடுவதும், தப்பெண்ணம் கண்டு பிடித்து விடுவதும், சுலபம்—ஆனால் நேர்மை அல்ல. பொறுத்திருந்து, தீரயோசித்துக் காரியம் செய்வது, எந்த வகையிலும் நன்மை பயக்கக் கூடியது.

பிரச்னை, தனிப்பட்ட மாச்சரியம், குரோதம் ஆகியவைகளை வைத்துக்கொண்டு, நடத்தும் விளையாட்டல்ல. பல ஆண்டு காலமாக இருந்துவரும், பந்தம், பாசம் ஆகியவை, இந்த ஒரு வேண்டுகோளை அவர் மதிக்கக் கூடப் பயன் படவில்லையே, என்ற நெஞ்சு நோகும் நிலையிலுள்ளவர்கள், இனிக் கொள்கைக்கு முரண்பாடின்றி, எப்படிப் பணிபுரிவது, எத்தகைய பணிபுரிவது என்ற சிக்கலில் தள்ளப்பட்டிருக்கும் பிரச்னையாகும்.

ஆகவேதான், அமைதியாகச் சிந்தியுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

'நானே அவசரமாகக் காரியம் செய்து விட்டேன்' என்று சிலரால் எண்ணப்படுகிறேன், என்றால், இந்தப் பிரச்னையிலே, திடீர் முடிவுகள் செய்வது, எவ்வளவு தீமை தரக்கூடியது என்பதைத் தோழர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாம், நமது நோக்கத்தைத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறோம்—பலரும் அதை ஆதரித்திருக்கிறார்கள் — அந்த ஆதரவாளர்களின் தொகையை, அளவை மேலும் அறிந்து, பிறது, கூடிக் கலந்துபேசி, ஒரு நல்ல முடிவுக்கு வரலாம், அதுதான் முறை; அதுதான் என் வேண்டுகோள்.

அன்பன்,

சி. என். அண்ணாதுரை.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது நாம் செய்ய வேண்டிய முதல் வேலை நம் கன்னத்தில் வழியும் கண்ணீரைத் துடைத்துக் கொள்வது!

ஆம், அதுதான்!

அன்பர்களுக்கு

★

விடுதலையில் 13—7—49ல் ஈ. வெ. ரா. என்ற கையொப்பமிட்டு பெரியார் வெளியிட்டிருக்கும் "திருமண எண்ணத் தோற்றத்துக்குக் காரணமும் அவசர முடிவும்" என்ற தலையங்கத்தைப் பார்த்தேன். அது விஷயமாகச் சட்ட சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கான ஆலோசனை கூறுவதற்காக, அட்வகேட் F. ஜெகநாதன் அவர்களை அனுப்பியிருக்கிறேன். அவர் ஆய்ந்தறிந்து தக்க நடவடிக்கை எடுக்க இசைந்துள்ளார் என்பதை அன்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்,

அண்ணாத்துரை.

"சமரச கீதம்" பாடுவோரே, கேண்மின்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நடப்பதற்கு முன் திருமணமும் செய்து கொண்டார், செய்துகொண்ட பிறகு கமிட்டித் தோழர்களுக்குச் "சேதி"யையும் தெரிவிக்கவில்லை என்று சொன்னால், பெரியார், கழக நிர்வாகக் கமிட்டியை, காலால் மிதித்து நசுக்கிவிடக்கூடிய காளானாகவோ, தொட்டால் துவண்டு விழக்கூடிய கிள்ளுக்கீரையாகவோதான் மதித்திருக்கிறாரே தவிர, அந்தக் கமிட்டிக்கும் "உயிர்" உண்டு என்பதாகவோ, அதற்கும் ஒரு தனி "வாழ்க்கை" இருக்கிறது என்பதாகவோ, அதுவும் மதிக்கப்பட வேண்டிய ஒரு "பொருள்" என்பதாகவோ அவர் கருதுகிறார் என்று பார்தானாகட்டும், எப்படித்தான் தைரியமாக நிமிர்ந்து நின்று கூற முடியும்?

ஒரு கட்சித் தலைவர், தன் கட்சியின் ஆட்சிக் குழுவை இதைவிட அலட்சியமாக நடத்தியிருக்கிறார் என்றோ, இதைவிட அலட்சியமாக நடத்தமுடியும் என்றோ யாருமே கூறமுடியாது! நமக்கு மானமோ ரோஷமோ வெட்கமோ கிடையாது என்று அவர் தீர்மானித்திருந்தால் ஒழிய, இவ்வளவு தூரம் நம் கழக நிர்வாகக் கமிட்டியை அவர் அலட்சியப்படுத்தி இருக்கமாட்டார்.

நிர்வாகக் கமிட்டி—நாளை காலை! திருமணம்—இன்று மாலை! நினைத்துப் பார்த்தால் நம் உள்ளத்தை வாள்கொண்டு அறுப்பதுபோல அல்லவா காட்சி தருகிறது இச் சம்பவம்! எவ்வளவு கொடுமை! எத்தகு கோரமை!

சனிக்கிழமை திருமணம்செய்துகொண்ட தலைவர், ஒரு நாள் பொறுத்து, ஞாயிறன்று கூடும் கமிட்டி தந்திடும் கருத்து யாது என்பதை அறிந்துகொண்டு, திங்களன்று திருமணத்தைச் செய்துகொண்டிருக்கக் கூடாதா, அல்லது இரண்டு நாட்கள் முன்னதாகவோ இரண்டு நாட்கள் பின்னதாகவோ செய்திருக்கக்கூடாதா, சரியாக கமிட்டிகூடிடும்நேரமாகப் பார்த்து, அந்தக் குறிப்பிட்ட வேளையில்தானா செய்துகொள்ள வேண்டும்! பெரியாரின் இந்த அலட்சியத்தையும் அவமானப் போக்கையும் அறிந்த பிறகு, அந்தக் கமிட்டி உறுப்பினர்களின் உள்ளம் எவ்வளவு துடித்ததோ! அவர்கள் நெஞ்சிலே என்னென்ன எண்ணங்கள் அலைமோதினவோ! அவர்கள் எவ்வளவு வேதனைப்பட்டு வருத்தப்பட்டு வாட்டமுற்றுக்கிடந்தனரோ, யார் அறிவர் "பாபம்!"

தஞ்சாவூரிலிருந்து, செங்கற்பட்டிலிருந்து, இராமநாதபுரம் மதுரைப் பக்கங்களிலிருந்து, சேலத்திலிருந்து, கோவையிலிருந்து, சென்னையிலிருந்து, வடார்க்காடு தென்னார்க்காடு மாவட்டங்களிலிருந்து, தமிழகத்தின் மூலை முடுக்குகளிலிருந்து நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் ஓடோடி வந்தனர் திருச்சி நகருக்கு நண்பர் வேதாசலத்தின் அன்பழைப்பை ஏற்று! வேதாசலனார், பெரியாருக்கு நெருங்கிய நண்பராயிற்றே, திருமணத்தைப் பற்றிய ஏதேனும் விளக்கத்தை அல்லது இரகசியத்தை பெரியார் வேதாசலனாருக்குக் கூறியிருப்பார், கேட்கலாம் என்ற கருத்துடனே அவசர அவசரமாக வந்தனர் கமிட்டி உறுப்பினர்கள். கூடினர், பேசினர். முடிவில், திருமணத்தை எவ்விதத்திலும் கைவிட்டுவிட வேண்டுமென்று பெரியாரை வற்புறுத்திக்கேட்டுக் கொள்ளும் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு, கூட்டத்தை முடித்துக்கொண்டு, பகல் உணவு அருந்த அமர்கின்றனர். அந்த நேரத்திலே, செய்தி வருகிறது தோழர் வேதாசலத்திற்கு திருமணம் முடிந்துவிட்டது என்பதாக! அந்த நேரத்திலே அந்தச் சேதியைக் கேள்விப்பட்டபோது எவ்வளவு மனம் பதறி இருப்பர் அந்தத் தோழர்கள்! திருமண ஏற்பாட்டைப் பெரியார் கைவிட்டுவிட வேண்டும் என்ற தங்கள் உள்ளத் துடிப்பை தீர்மான வடிவமாக்கி தலைவர் பெரியாரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாக தொலை தூரத்தில் இருந்தெல்லாம் ஓடிவந்திருக்கும் கமிட்டி உறுப்பினர்களின் முகம் பெரியார், இதுபோலத் தங்களை ஏமாற்றிவிட்டார் என்பதை அறிந்தபோது எவ்வளவு சுண்டிப் போயிருக்கும்!

ஏன் பெரியார் நிர்வாகக் கமிட்டியையேகூட இவ்வளவு அலட்சியப்படுத்தத் தொடங்கிவிட்டார்?

நிர்வாகக் கமிட்டியே இனித் தேவையில்லை என்பது அவர் கருத்தா?—அப்படி இருக்கமுடியாதே!

நிர்வாகக் கமிட்டியில் இருப்பவர்களின் கருத்து தன்னால் மதிக்கப்படவேண்டிய அளவு "யோக்கியதை" உடையதல்ல என்பது அவர் நினைப்பா—அப்படி இருக்கக் கூடாதே!

நான் வைத்த கமிட்டி அல்லவா இது, இந்தக் கமிட்டி என் கருத்தை மீறிப் போவதா அவ்வளவு துணிச்சலா என்ற எண்ணமா—அந்த எண்ணத்தைக் கொள்வது ஜனநாயகவாதி செய்யக்கூடாத செயல் ஆயிற்றே!

இப்படிப்பட்ட எண்ணங்களெல்லாம் அவருக்குக் கிடையாது என்று சொல்லப்படுமானால், பிறகு, ஏன் பெரியார், கமிட்டிக்கு, சிறிதளவு, மதிப்பு—கொஞ்சம் கவுரவம் — சற்றே ஒத்துழைப்பு இவற்றைக்கூட தர மறுத்துவிட்டார்?

ஏன்—என்ன காரணம்?

எதற்காக இப்படி நடந்துகொண்டார் பெரியார்?

ஒரு கட்சியினுடைய நிர்வாகக் கமிட்டி என்பது அந்தக் கட்சியை நடத்திச் செல்லும் மூளையும், அந்தக் கட்சியின் இரத்த ஓட்டத்தை ஒழுங்குபடுத்தும் இருதயமும் போன்றது. கட்சியின் தலைமை அமைப்பு நிர்வாகக் கமிட்டி. இந்தக் கமிட்டியை இவ்வளவு அலட்சியமாக எண்ணியிருக்கிறாரே பெரியார்—இது நியாயமா?

நாம் கேட்கிறோம், இது முறையா?

இன்னமும் கூட பெரியாரின் தலைமையிலேயே இருந்து பணியாற்றவேண்டும் என்று **மனந் துணிந்து** எழுதுகிறார்களே சிலர், "திருமண ஏற்பாடுபற்றி இதுவரை ஏற்பட்ட கருத்து வேற்றுமையை இத்துடன் மறந்துவிட" வேண்டுமென்று, ஏதோ, எல்லாம் சரிப்பட்டுப்போய் விட்டதைப்போல எண்ணிக்கொண்டு "சமரசகீதம்" பாட முன்வந்திருக்கிறார்களே சில சமாதானத் தூதர்கள், அவர்களைத்தான் கேட்கிறோம், வேறு யாரையோ கூட அல்ல, ஏன் பெரியார் நம் கழகக் கமிட்டியை இவ்

நாம் மறந்துவிட்டாலும் நாடு மறவாதே !

வண்ணம் முற்றிலும் அலட்சியப் படுத்தியிருக்கிறார்? "கழகத் தோழர்கள் அனைவரும் கழகத்தை விட்டு நீங்குவதோ, ஒதுங்கிநிற்பதோ இல்லாமல், இனி, தீவிரமாகப் பணியாற்றவேண்டும்" என்றுகேட்டுக் கொள்கிறார்களே, அவர்கள், இதோ, நிர்வாகக் கமிட்டியின் தன்மானத்திற்கே இழுக்குத் தேடும் வகையில்நடந்திருக்கிறாரே பெரியார், இதற்கு என்ன சமாதானம் கூறுகிறார்கள்?

நடந்ததையெல்லாம் மறந்துவிட்டு தீவிரமாகப் பணி புரிய வேண்டுமாமே, கண்ணியமே உருவான கனவான்கள் என்று நம்மாலே இதுவரை கருதப்பட்டுவந்த இரண்டொருவர் இதுபோலக் கூறுகின்றனரே, எதை மறந்துவிடுவது? எப்படி மறந்து விடுவது? மறக்கத்தான் முடியுமா?

எதை மறந்துவிடச் சொல்கிறார்கள் இந்தப் "புண்ணிய புருஷர்கள்"?

பெரியார் அவர்கள், அவரும் நாமும் இத்தனை ஆண்டுகளாகச் செய்துவந்த பகுத்தறிவுப்பிரசாரத்திற்கு முற்றிலும் முரணான வகையில் பொருந்தாத் திருமணம் புரிந்துகொண்டாரே, அதையா மறந்துவிடச் சொல்லுகிறார்கள்—அதை மறக்க முடியாதே!

அப்படி அவர் பொருந்தாத் திருமணம் செய்துகொண்டதன் விளைவாக, இதுநாள்வரை மாற்றாரும் மாசு இலா மணி என்று போற்றிப் புகழும் புனிதத் தன்மை நிறைந்ததாக ஒளி வீசி வந்த நம் அருமை இயக்கத்தின் தூய பெயர்மீது இந்நாள் அழிக்க முடியாத கறை படிந்துவிட்டதே, இந்தக் கறை படிந்து இருப்பதையா மறந்துவிட வேண்டும் என்று நவில்கிறார்—இதை, நாம் மறக்க முயன்றாலும் நாடு மறவாதே!

நம் இயக்கத்தின் புனிதத் தன்மைமீது இந்நாள் புழுதி படிந்ததைக்கண்டு உள்ளம் புழுங்கிக் கிடக்கிறார்களே நம் தோழர்கள், மூலையில் முடங்கிக் கிடக்கிறார்களே உணர்ச்சி உற்சாகம் தீரம் தீவிரம் கிளர்ச்சியான மனப்போக்கு அவ்வளவையும் இழந்து, தலைவரின் தகாச் செயலாலே நேர்ந்த அவமானத்தை எண்ணி வீதி வழியே செல்ல அஞ்சி வீணர்கள் போல வீட்டிலே அடைபட்டுக் கிடக்கிறார்களே நம் வீரர்கள்—இதையா மறந்துவிடவேண்டும என்று மணியோசை எழுப்புகிறார்கள்! முடியாதே இந்த வேதனைமிகு நிலைமையை மறக்க! இதை மறப்பவர் மனிதரும் அல்லவே! நீர் மல்கும் கண்களைக் கரத்தாலே துடைத்துக் கொண்டு, நடுங்கும் கரங்களை உள்ளத்தாலே சமாதானப் படுத்திவிட்டு, அந்தோ அந்தோ என அரற்றும் நாக்கினை உதட்டாலே ஒடுக்கிவிட்டு, தலைவரின் தாள்களிலே வீழ்ந்து பணிந்து, தலைவரே, தந்தையே, எங்கள் உள்ளத்தை ஆளும் உத்தமரே, தயவு செய்ய மாட்டீரா — கொஞ்சம் கருணை காட்டமாட்டீரா—திருமணத்தை நிறுத்தமாட்டீரா—உங்கள் தொண்டர்கள் கேட்கிறோமே, சித்தம் இரங்க வில்லையா என்றெல்லாம் ஆயிரமாயிரம் தொண்டர்கள், பக்தர்கள் ஆண்டவனிடம் வரம் கேட்பார்களே அதுபோன்ற முறையிலே, எவ்வளவோ பணிவாக, எவ்வளவோ வணக்கமாக, எவ்வளவோ தாழ்மையாக, எவ்வளவோ கனிவாக மென் மொழியாலே கெஞ்சிக் கேட்டார்களே அப்படிக் கேட்டபோது அம்மா அம்மா என ஆசையுடன் கூவிக்கொண்டே தன்னை நெருங்கிவந்த கன்றினை தாய்ப்பசு காலால் உருட்டித்தள்ளிடும் தன்மை போல பெரியார் அத்தூய்மையேஉருவான தொண்டர்களைப் பார்த்து **சுயநலமிகள்—விஷமிகள்—எதிரிகள்— உஷாராகக் கவனிக்கப்பட வேண்டியவர்கள் சதிகாரர்கள்** என்றெல்லாம் நம் பிறவி எதிரிகளும் சொல்லக்கூசும் கடுவிஷம்போன்ற சொற்களை மட்டுமரியாதை இன்றி, ஈவு இரக்கமின்றி, முன் பின் பாசத்தையும் பாராது அள்ளிவீசினாரே அடுக்கடுக்காக — அந்த உள்ளத்தைப் பிளக்கும் சம்பவத்தையா மறந்துவிடச் சொல்கிறீர்கள் ? அதையா மறக்கமுடியும் ? அதை மறக்கவா முடியும் ? அதையும் மறந்துவிட்டு மாநிலத்தில் வாழும் அளவுக்கு நம் உள்ளம்என்ன சுடுகாடா?

நம் இயக்க வளர்ச்சிக்காகவே பாடுபடும் உத்தமர்களை, தூய்மை சேர் தொண்டர்களை, உழைப்பே உருவாக வந்த உண்மைத் தோழர்களை, பேச்சையும் எழுத்தையும் உழைப்பையும் மூன்று சிறந்த ஆயுதங்களாகக் கொண்டு இரவென்றும் பகலென்றும் பாராது, இளமையென்றும் பாராது முதுமை என்றும் பாராது, காதல்வாழ்விலே உலவ வேண்டிய பருவம் என்பதையும் மறந்து — கல்லூரி மாடியிலே இருக்க வேண்டிய நேரம் என்பதையும் மறந்து, பொதுவாழ்வுப்பணியிலேஇரண்டறக் கலந்து நின்று பாடுபடும் நண்பர்களை, ஆம்! அத்தனை பேரையும், **சதிகாரர்கள்** என்றுஎப்படியோ மனம் துணிந்து எழுதினாரே பெரியார், அந்தக் கொடுமையிற் கொடிய எழுத்தினையும் எப்படியோ சுமந்து கொண்டு வந்ததே நம்முடையது நம்முடையது என்று நேற்றுவரை நம்மாலே பாராட்டிப்பாராட்டிப்புகழ்ந்துரைக்கப்பட்ட "**விடுதலை**", அந்த சம்பவத்தையா மறந்துவிடச் சொல்கிறார்கள்? மறக்கமுடியாதே அதை! நமக்கு இருதயம் இருக்கிறதே! நம் இருதயத்தில் ஈவு இரக்கம் இருக்கிறதே! நமக்குக் கண்கள் இருக்கின்றனவே! அந்தக் கண்களுக்கு நீர் சொரியும் தன்மையும் இருக்கிறதே! நமக்கு மானமும் ரோஷமும் உண்டே! அவற்றை இழந்துவிட்டு வாழும் மரக்கட்டைகள் அல்லவே நாம்! நாம் எப்படி நம் அருமைத் தலைவர்களையும் - தளபதிகளையும் தொண்டர்களையும் தோழர்களையும் **சதிகாரர்கள்** என்ற பயங்கர வார்த்தையாலே பழி கூறிய படலத்தை மறந்துவிட முடியும்? நாம் மறந்தாலும் நம் உள்ளம் மறவாதே! நம் உள்ளம் மறந்தாலும் நம் உடலில் இருக்கும் தசைமறவாதே! அந்தத் தசையிலிருக்கும் ஒவ்வோர் அணுவும் நம் உத்தமத் தோழர்கள் மீது வீசப்பட்ட இந்த மிகப்பெரிய வீண்பழியை நாம்மறந்துவிட்டால், **நீயும் ஒரு மனிதனா** என்று நம் ஒவ்வொருவர் உள்ளத்தையும் ஒவ்வொரு வினாடியும் இடித்து இடிக்

(4-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)